## பொருட்சுருக்கம்

பள்ளிக் கல்வி – கட்டடங்கள் - 2005-2006-ஆம் ஆண்டிற்கான - பகுதி II திட்டம்–- உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு 5 அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல் (கட்டடம் ஒன்றிற்கு ரூ.7.00 இலட்சம்) - நிதி மற்றும் நிர்வாக ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (எக்ஸ்..1)துறை**

அரசாணை (நிலை) எண்.91
நாள் 20.5.2005

படிக்கப்பட்டவை

தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண்.36548/கே2/2004, நாள் 13.5.2005.

***

ஆணை:

தொடக்கக் கல்வி இயக்குநரின் படிக்கப்பட்ட கடிதத்தில், 2005-2006-ம் ஆண்டிற்கான பகுதி.II திட்டத்தின் கீழ் உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு 5 அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு, கட்டடம் ஒன்றிற்கு ரூ.7.00 இலட்சம் வீதம், மொத்தம் ரூ.35.00 இலட்சம் தொடராச் செலவினமாக, மூலதனக் கணக்கில் ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கும்படி அரசிடம் கேட்டுள்ளார்.

2. தொடக்கக் கல்வி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு நன்கு பரிசீலித்தது. , 2005-2006-ம் ஆண்டிற்கான பகுதி.II திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டம்- பாப்பிரெட்டிபட்டி, இராமநாதபுரம் மாவட்டம்- பரமக்குடி, திருவள்ளூர் மாவட்டம்- மீஞ்சூர், கோவை மாவட்டம்- அவிநாசி மற்றும் தஞ்சாவூர் மாவட்டம்- திருவிடை மருதூர் ஆகிய இடங்களில் 5 உதவி தொடக்கக் கல்வி அலுவலகக் கட்டடங்கள், கட்டடம் ஒன்றிற்கு ரூ.7.00 இலட்சம் வீதம், ஐந்து கட்டடங்களுக்கும் தொடராச் செலவினமாக (மூலதனம்) மொத்தம் ரூ.35,00,000/- (ரூபாய் முப்பத்தைந்து இலட்சம் மட்டும்) கட்டுமானப் பணிக்கு நிர்வாக ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இக்கட்டுமானப் பணிக்காக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை பணம் எடுக்கும் அலுவலரான தொடக்கக் கல்வி இயக்குநர் பெற்று வழங்கிடுவார். மேலும்,

ஒருங்கிணைப்பாளர் மற்றும் கண்காணிப்பாளராக நிர்வகிப்பார். இந்த 5 கட்டுமானப் பணிகளும் தொழில்நுட்பக் கல்வி வட்டம், பொதுப்பணித் துறை மூலம் செயல்படுத்தப்படும்.

4. மேற்கண்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"4202 - கல்வி, போட்டி, விளையாட்டு, கலை பண்பாடு குறித்த மூலதனச் செலவு- 01. பொதுக்கல்வி-201. தொடக்கக் கல்வி- பத்தாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள்- II மாநிலத் திட்டம்- -JD. கட்டடங்கள் கட்டுதல்- தொழில்நுட்பக் கல்வி வட்டம் மூலம் செயலாக்கம் - 16 பெரும் பணிகள்" (த.தொ.கு. 4202 01 201 JD.1603)

5 இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.36843/கல்வி.II/2005-1, நாள் 20.5.2005-ல் வழங்கப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கிரிஜா வைத்தியநாதன்,
அரசு செயலாளர்

பெறுநர்

தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை - 6
மாநில கணக்காய்வுத் தலைவர் (எ & இ), சென்னை 18
(பெயரில்)
மாநில கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-I), சென்னை 18.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை 35

நகல்

நிதித்(BG II/கல்வி.II) துறை சென்னை 9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்